முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.147/2017**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 15.07.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 15.07.2025 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சிவகாமசுந்தரி | வயது.. | 54 |
| கணவர் பெயர்.. | ராஜரத்தினம் | கிராமம்.. | ஸ்ரீவாக்காரமாரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

3. காட்டுமன்னார்கோவில் நீதிமன்றத்தில் இருந்து OS.147/2017 மாறுதலாக இந்நீதிமன்றத்திற்கு வந்தது என்றால் சரிதான். அதற்கு முன்பாக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் OS.147/2017 மற்றும் OS. 167/2015 வழக்குகள் உள்ளது. OS.167/2015 வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பேரூராட்சி, EB ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோவில் தாசில்தார், மாசுக்கட்டுபாடு, விநாயகம் எதிராக தாக்கல் செய்தேன் வழக்கு 10 வருடமாக நடக்கிறது. முழுமையாக OS.167/2015 வழக்கு யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாசில்தார் மீது எதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மரபட்டறை சம்மந்தமாக , தொந்தரவாக இருப்பதால் EB connection துண்டிக்கவேண்டி வழக்கு தாக்கல் செய்தேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், தாசில்தாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு நினைவில்லை.

4. எத்தனை மின்துறை அலுவலகத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அவற்றின் முழு முகவரி தெரியுமா என்றாலும் முகவரி எனக்கு தெரியாது, 4 EB அலுவலகத்திற்கு மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பாக மின்துறை அலுவலத்திற்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். தனிநபர்கள் யார் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ரத்தினசாமி மீதும், விநாயகமூர்த்தி மீதும் வழக்க தாக்கல் செய்துள்ளேன். ரத்தினசாமி இறந்துவிட்டார் . ரத்தினசாமி இறக்கும் போது நான் சென்னையில் இருந்தேன் அவர் எப்போது இறந்தார் என்று தெரியாது. ரத்தினசாமி எதற்காக வழக்கில் சேர்தோம்

என்றால் அவர் இடம் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளது. நான் சென்னையில் வசிக்கும்போது மரஇழைப்பகம் இரவோடு இரவாக ஏற்படுத்திவிட்டார்கள் அதற்காக தான் வழக்கு தாக்கல் செய்தேன். மரஇழைப்பகத்தை ரத்தினசாமி நடத்தினாரா என்றால் அப்போது அவர் முடியாமல் இருந்தார். ரத்தினசாமி இந்த வழக்கில் ஆஜரானாரா என்றால் இல்லை. ரத்தினசாமி இறந்தபிறகு வழக்கில் பிராதை திருத்தம் செய்தோமா என்றால் எனக்கு தெரியவில்லை வழக்கை விநாயமூர்த்தியின் பெயரில் மாறிவிட்டது என்று நினைக்கிறேன். வழக்கு சொத்து விநாயமூர்த்தி பெயரில் மாறிவிட்டதா என்றால் தெரியாது.

5. ரத்தினசாமி இறந்தபிறகு விநாயமூர்த்தியை மட்டும் வழக்கில் சேர்த்தோமா என்றால் ரத்தினசாமியின் 2 மகள்கள் , பேரபிள்ளைகள் இருவர் பெயர் ஞாபகம் இல்லை சேர்க்கப்பட்டார்கள். சேர்க்கப்பட்ட வாரிசுகளுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் ரத்தினசாமியின் வாரிசு என்ற முறையில் சேர்த்தோம். ரத்தினசாமிக்கு பிறகு மரஇழைப்பகம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அவருடைய வாரிசுகளுக்கு தான் இருக்கும். ரத்தினசாமிக்கும் வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்றாலும் அவருக்கு எதிராக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மரஇழைப்பகத்திற்கு EB connection துண்டிப்பு வேண்டி, தொந்தராவாக இருக்கும் காரணத்தினால் வழக்கு தாக்கல் செய்தேன். EB connection எண். தெரியுமா என்றால் தெரியாது, எப்போது connection கொடுக்கப்பட்டது என்றால் 24.7.2014 இல் கொடுக்கப்பட்டது என்று நினைக்கிறேன். நான் 05.03.2014 இல் EB connection கொடுக்கக்கூடாது என்று தாசில்தார், பேரூராட்சி. EB, விநாயகமூர்த்திக்கும் அறிவிப்பு அனுப்பினேன்.

6. அதற்கு பிறகு EB connection கொடுக்கப்பட்டது, தெருவில் உள்ள அனைவரும் EB connection கொடுக்கப்பட்டதற்காக EB அலுவலகத்தில் போராட்டம் செய்தோம், அச்செய்தி நாளிதழில் வந்தது. மேற்சொன்ன விஷயத்தை வழக்கில் கூறியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் ஆவணமாக நாளிதழை தாக்கல் செய்திருக்கிறேன். நாளிதழுக்காக எவ்வளவு செலவு செய்தோம் என்றால் நாங்கள் செய்யவில்லை, பத்திரிக்கை காரர்களே செய்தி போட்டார்கள். அவ்வாறு சம்பவமே நடக்கவில்லை என்றாலும், நாளிதழில் நானே விளம்பரம் செய்தேன் என்றால் சரியல்ல, ஆட்சியரிடம் மனு கொடுத்தோம். நாங்கள் போராட்டம் செய்யும் சமயத்தில் EB connection யை துண்டித்துவிட்டு பிறகு மீண்டும் connection கொடுத்துவிட்டார்கள். மேற்சென்னவற்றிற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் செய்த போராட்டத்தின் அடிப்படையயில் EB அலுவலகத்தில் விசாரணை செய்தார்களா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் தலையிட முடியாது என்று கூறிவிட்டார்கள்.

7. போராட்டத்திற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் சரிதான் என்று கூறிவிட்டு மீண்டும் சாட்சி Stay petition கொடுத்துவிட்டு பிறகு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். காட்டுமன்னார்கோவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் எண். தெரியுமா என்றால் OS.147/2015 ஆகும். காட்டுமன்னார்கோவில் வழக்கு யார் பெயரில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ரத்தினசாமி, விநாயமூர்த்தி, பேரூராட்சி, தாசில்தார், EB இரண்டு வழக்கிலும் பரிகாரம் ஒன்றா என்றால் எங்களுக்கு பரிகாரமாக மரஇழைப்பகத்தை எடுக்கவேண்டும், EB connection யை துண்டிக்கவேண்டும். 1ம் பரதிவாதி விநாயமூர்த்தி பெயரில் வழக்கு சொத்து இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் உரிமையாளரா என்று தெரியாது, எனக்கு மரஇழைப்பகத்தை எடுக்க வேண்டும்.

8. வழக்குரையிலும், முதல்விசாரணையிலும் ஒரே விஷயத்தை தான் கூறியுள்ளேனா என்றால் ஒன்றை தான் கூறியுள்ளேன். வழக்கில் தெருக்காரர்கள் யாரேனும் சாட்சியாக வந்துள்ளார்களா என்றால் இனிமேல் வருவார்கள், அழைத்து வருவேன். 1ம் பிரதிவாதியின் வீடும், மரஇழைப்பகமும் ஒன்றே தான் என்றால் முன்பு மரஇழைப்பகத்திற்கு எதிரே வீடு இருந்தது தற்போது மரஇழைப்பகத்திற்கு அருகில் shed போட்டு வசிக்கிறார்கள் ஏற்கனவே வீடு இருந்தது அவற்றின் விவரங்களை வைத்து ரொம்ப வருடமாக வீடு இருந்ததாக கூறுவார்கள். 1ம் பரதிவாதிக்கு எனது வீட்டிற்கு அருகில் பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால் ஒரு இடம் பூர்வீகமானது மற்ற இடம் கிரயம் வாங்கியது. பூர்வீகம் என்றால் சுமார் 50 - 60 வருடம் இருக்கும் என்றால் நான் திருமணம் ஆகி வந்ததில் இருந்து இருக்கிறது அதற்கு முன்பு எனக்கு தெரியாது, அப்போது வீடு இல்லை இடம் தான் இருந்தது.

9. விநாயமூர்த்தியின் பூர்வீக தொழில் என்னவென்றால் அவர் அப்பா ஆசாரியாக இருந்தார், இவர் படித்துகொண்டிருந்தார், எல்லா வேலைகளும் செய்வார். 1ம் பரதிவாதி பல தொழில்கள் செய்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஆசாரி தொழில் எதை வைத்து செய்வார்கள் என்றால் மரத்தை வைத்து செய்வார்கள். என்ன உபகரணம் செய்வார்கள் என்றால் கட்டில், பீரோ போன்றவை, எந்த மரத்தை வைத்து செய்கிறார்கள் என்றால் வேம்பு, பூவரசு, தேக்கு ஆகியவற்றை மட்டும் வைத்து செய்கிறார்கள் என்றாலும் அவை அனைத்தும் வீட்டு உபயோகத்திற்கு பயன் படுத்துவது என்றாலும், உடல் நலத்திற்கு நல்லது என்றாலும் சரியல்ல, எல்லா மரத்தையும் பயன்படுத்துவார்கள் குறிப்பாக எந்த மரம் என்று தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், வேம்பு, பூவரசு மரம், உள்ளடவை வைத்து மட்டும் தான் உபகரணங்கள் தயாரிக்கப்படுகிறது என்று சொன்னாலும் சரியல்ல.

10. 1ம் பிரதிவாதி எந்தவித உரிமமும் பெறாமல் வீட்டிற்கு பெற்ற EB connection யை வைத்து மரஇழைப்பகம் நடத்திவருகிறார், மேற்சொன்னவற்றிற்கு ஆவணம் சாட்சியம் இருக்கிறாதா என்றால் இருக்கிறது. வீடு கட்டுவதற்காக EB connection பெற்று மரஇழைப்பகத்திற்கு பயன் படுத்தினார்கள் என்பதற்கான ஆவணத்தை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வழக்கு சொத்தான மரஇழைப்பகத்தை வேறு பெயர் சொல்லி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வால்பட்டறை, மரதொழிற்சாலை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது, அதற்கான பெயர் தெரியுமா என்றால் நிரன்ஜன் மரஇழைப்பகம் என்று தற்போது உள்ளது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது.

11. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு Board இல்லை. 1ம் பிரதிவாதி உரிமம், EB connection பெறும்பொழுது எந்த பெயரில் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. 3 தலைமுறையாக பிரதிவாதி வழக்கு சொத்தில் தொழில் செய்து வருகிறார் என்றால் அப்போது எந்த சத்தமோ, தொந்தரவோ இல்லை. நிரன்ஜன் என்ற பெயரில் எப்போது ஆரமித்தார்கள் என்றால் 2014 இல் ஆகும். பிரதிவாதி Micro industries செய்துவருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரயம் பழனி மகன் பாலகிருஷ்ணனிடம் இருந்து பெற்றேன் என்றால் சரிதான், அவர் பிரதிவாதியின் உறவினரா எனறால் உறவினார் இல்லை ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள். 1ம் பிரதிவாதி எனது பக்கத்துவீட்டுக்காரர் என்றாலும் நான் கிரயம் கேட்டதற்கு அவர்தரவில்லை என்பதால் பிரச்சனை செய்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல, சுத்த பொய்ய ஆகும்.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Padmavathi,*
Principal District Munsif
Chidambaram.